# மனித வாழ்வின் இறுதி இலக்கு: பகவத்கீதையை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

**இ.சகாயசீலன்**
**சிரேஸ்ர விரிவுரையாளர்**
**ஒப்பீட்டுச்சமயமும் சமூக நல்லுறவும் கற்கைகள் துறை**
**கலை கலாசார பீடம்**
**கிழக்குப் பல்கலைக்கழகம்**
**வந்தாறுமூலை**
**இலங்கை.**
Corresponding author's e-mail: **srsahayaseelan@yahoo.com**

**ஆய்வுச் சுருக்கம்:** உலகின் புராதனமான நாகரிகங்களிற் சமயங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெற்றுள்ளன. உலக வாழ்வியல், ஒழுக்கம், தத்துவ சிந்தனை, கலை, இலக்கியம் முதலான துறைகளிற் சமயத்தின் செல்வாக்கு காலங்காலமாக இருந்து வருகின்றது. சமயங்கள் பெரும்பாலும் மனிதவாழ்க்கை, உலகம், இறைவன் ஆகிய முப்பொருள்களைப் பற்றிப் பேசுகின்றன. கடவுள் நம்பிக்கை, வழிபாடு, தத்துவசிந்தனை, ஒழுக்கசீலங்கள் போன்றன சமயப் பெருநெறிகளில் அடிப்படையான விடயங்களாகும். சமயமானது பிறப்பிலிருந்து இறப்புவரை மனித வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்துகின்றது. அந்த வகையில் இந்து தத்துவநூல்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்ற பகவத்கீதை குறிப்பிடும் மனிதவாழ்வின் இறுதி இலக்குப்பற்றி இங்கு ஆராயப்படுகின்றது. இந்து தத்துவ நூல்களுள் ஒன்றான பகவத்கீதையில் மனித வாழ்வின் இறுதி இலக்கு பற்றிச் சொல்லப்படும் கருத்துக்களை தத்துவார்த்த அடிப்படையில் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். பகவத்கீதையில் மனித வாழ்வின் இறுதி இலக்கு எனக்கொள்ளும் விடயங்கள், அதனை அடைவதற்கு அவை கூறுகின்ற வழிமுறைகள் என்பவற்றைக் கண்டறிவது ஆய்வுக்குரிய பிரச்சினையாகும். கீதையின் சிறப்பினைக்கூற அவற்றிற்கான விளக்கநூல்கள் மிகுந்தளவிலே காணப்படுகின்றன. அந்நூல்களை அடிப்படையாகக் கொண்டு வரலாற்றுப் பகுப்பாய்வு முறையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படும். பகவத் கீதையில் வினைப்பயன், மறுபிறப்பு என்பன பற்றிய கோட்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. பிறவி என்பது வினைப்பயனுக்கேற்ப மீண்டும் மீண்டும் இடையறாது நிகழ்வது. அது துன்பம் கலந்தது. பிறிவியிலிருந்து விடுபடுவதே மனித வாழ்வின் இறுதி இலக்காகும். அது துன்பம் நீங்கிய நிலை. இவ்வடிப்படையில் பகவத்கீதை குறிப்பிடும் மனித வாழ்வின் இறுதி இலக்கினை இனம் கண்டு, அவற்றினை வெளிக்கொணர்தல் இவ்வாய்வின் கருதுகோளாகும்.

**கலைச்சொற்கள்:** பகவத்கீதை, இறுதி இலக்கு, முக்தி, இந்து தத்துவம்.

## அறிமுகம்

உபநிடதங்களுக்கு அடுத்தபடியாக இந்திய தத்துவத்தில் சிறப்பிடம் வகிப்பது பகவத்கீதை. உபநிடதந்களின் சாரமாகப் பகவத்கீதை திகழ்கின்றது. தத்துவ அறிஞர்கள் உபநிடதங்களை பசுவாகவும், கீதையை அதன்பாலாகவும் வருணிப்பர். மகாபாரதத்தில் கீதை ஓர் உறுப்பாக இருப்பதால் இதுவும் வியாசமுனிவரால் எழுதப்பட்டதே என்ற கருத்தும் உண்டு. மகாபாரதம் போரில் கடமையின் இன்றியமையாமையை வலியுறுத்தி, அர்ச்சுனனுக்குத் தேர்ச்சாரதியாக விளங்கிய கிருஷ்ணன் உபதேசம் செய்வதுபோல் அமைந்துள்ளது. இது பதினெட்டு அத்தியாயங்களைக் கொண்டு விளங்கும் அதேவேளை, கிறிஸ்தவர்களுக்கு விவிலியம்போல் இந்துக்களுக்கு புனிதநூலாக கீதை காணப்படுகின்றது. கீதை உபதேசத்தைக் கேட்டபிறகு அர்ச்சுனன் ஒரு துறவியாகவோ, ஒரு பரமபக்தனாகவோ ஆகிவிடவில்லை. அவன் ஒரு கடமை வீரனாகத் தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டான். மனத்திட்பமே வினைத்திட்பம் என்பதே கீதையின் கோட்பாடாகும். இறைமையுணர்வுக் கோட்பாடே கீதையின் முடிந்தமுடிவாகும். ஒருவன் இறையுணர்வைப்பெற்றால் அதுதான் ஆன்ம உணர்வாகும்.[13] கீதையிலே பல்வேறு தத்துவக்கருத்துக்கள் கூறப்பட்டுள்ளபோதிலும், மனிதவாழ்வின் இறுதி இலக்குப் பற்றிக் கூறப்பட்ட கருத்துக்களே இங்கு ஆராயப்படுகின்றன.

மனிதவாழ்வின் இறுதி இலக்கு என்பது பகவத்கீதையில், முக்தி, பரமபதம், அமரநிலை, பிறவாப்பெருநிலை, வீடுபேறு, இறைநிலை, பரமாத்மாவுடன் ஒன்றுதல் ஸாந்தி, பரமகதி, ஸம்ஸித்தி, ப்ரக்ம நிவாரணம் மற்றும் நிர்வாண பரமஸாந்தி என்று பலவாறாகக் கூறப்படுகின்றது. 'எதை அடைந்தபிறகு உலகுக்குத் திரும்பிவருவதில்லையோ அந்தநிலையே பரமபதம் எனப்படுகிறது.'[14]கடலுடன் கலந்த நதியானது கடலாய் மாறுவதுபோல் பரத்தைச்சார்ந்த மனிதன் பரவெளியில் கலந்துவிடுகின்றான். அதுவே சித் ஆகாசம் எனப்படுகிறது. இருட்டறையில் உட்கார்ந்திருக்கும் ஒருவனுக்கு 'நான்' இருக்கிறேன் என்ற உணர்வு இருக்கிறது. இந்த உணர்வை சூரியவெளிச்சம் விளக்குமா? விளக்காது. அப்படியே சந்திரனும் தீயும் அதனை விளக்கமாட்டா. இருக்கிறேன் என்ற உணர்வை அந்த உணர்வே விளக்குகிறது. அந்த உணர்வு என்றும் நிலைத்துள்ளது. அது தெளிவடைந்த நிலையே பரமபதம் எனப்படுகிறது. தெளிவடைந்தபிறகு அது அகண்டாகாரமாய் விடுகிறது. அதன்கண் போக்குவரத்து இல்லை. பிறப்பு இறப்பில்லை. காலதேச வர்த்தமானம் எல்லாம் அதனுள் ஒடுங்கிவிடுகின்றன. இப்பரவெளியில் கலக்கின்ற ஜீவன் முக்தர்கள் திரும்பவும் ஜீவபோதத்திற்கு வருவதில்லை. எனக்கீதை கூறுகின்றது. இதனை,"எங்கு சென்றவர்கள் திரும்பி வருவதில்லையோ, எதை ஞாயிறும், தீயும் விளக்கமாட்டாவோ அது எனது பரமபதம்."[15]எனும் சுலோகம் தெளிவுபடுத்துகின்றது.

முக்திநிலை என்பது ஆன்மாவின் முழுமைநிலை. விருப்பு, வெறுப்பு, இன்பதுன்பம், உயர்வுதாழ்வு என்ற வேறுபாடுகள் எதுவுமற்று எச்சூழலிலும் அதிர்வுறாது அமைதிகாணும் நிலை. ஆன்ம பயணத்தின் இறுதிப்புள்ளியான இந்நிலையினை

[13] சுப்பிரமணியன்,நா., கௌசல்யா சுப்பிரமணியன், இந்தியச்சிந்தனை மரபு, சவுத் ஏசியன் புக்ஸ், சென்னை, ப.51.
[14] ஆசுதோசானந்தர்.2001,ஸ்ரீமத் பகவத்கீதை, ஸ்ரீஇராமகிருஸ்ண மடம், சென்னை,பகவத்கீதை, 8:21
[15] மேற்படி, 15:6.

அடைவது எளிதன்று. இந்நிலை எய்தியவர்களுக்கு வேறுபாடுகள் இல்லை என்பதோடு பிறப்பு, இறப்பு என்பனவும் இல்லை. இந்திய தத்துவ அமைப்புக்களில் முக்திகாண்பதே முடிந்தமுடிவாக அமைகின்றது.

இந்திய விழுமிய வாழ்வில் (Values) மிக உயர்ந்த விழுமியமாக முக்தி கருதப்படுகின்றது. அறம், பொருள், இன்பம், என்ற மூன்று விழுமியங்களும் கருவிரீதியான விழுமியங்களாகவே பெரும்பாலான இந்திய தத்துவங்களினால் கருதப்படுகின்றன. உயர்ந்த, உன்னத விழுமியமாக மோட்சம் பேசப்படுகின்றது. மோட்சத்தினை அடையும் கருவிகளாக மேற்குறிப்பிட்ட மூன்று விழுமியங்களும் கருதப்படுகின்றன.

இந்திய தத்துவங்களில் சாருவகத்தைத் தவிர்த்து கன்மக்கோட்பாட்டினை அனைத்து தத்துவப்பிரிவுகளும் ஏற்றுக்கொள்வதன் மூலம் அவைகள் மறைமுகமாக முக்திக் கோட்பாட்டிற்கு (கருமத்திலிருந்து விடுதலை) முக்கியத்துவம் வழங்குகின்றன. சாருவகத்தைத் தவிர்த்து அனைத்து இந்திய தத்துவங்களும் இவ்வுலக வாழ்வினை துன்பமெனக்கருதி மோட்சத்திற்கு முக்கியத்துவம் வழங்குகின்றன. மோட்சத்தினை நிரந்தரமான இன்பமாக அவைகள் கருதி அவற்றுக்காகப் பாடுபடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.[16]

மீண்டும் மீண்டும் பிறப்பெடுத்து அல்லல் படும் நிலைகளிலிருந்து சுதந்திரம் பெறும் நிலையே முக்தி என்பதாகும். இறுதி இலக்கான மோட்சத்திற்கான துறவு வழியில் நடந்திட, அதற்கு முந்தைய பாதையான சம்ஸாரம் அவசியமானது. ஏனெனில், சம்ஸார வாழ்க்கையில் ஒருவர் பக்குவப்பட்ட பின்னரே அவர் துறவு வாழ்க்கைக்குத் தயாராகின்றார். துறவு வாழ்க்கையில் பக்குவப்பட்டு, இறுதி இலக்கான மோட்சம் எனும் மறுபிறவி இல்லாத நிலையினை அடைய தயாராகின்றார். இதுவே இந்து மறைகளில் பொதுவாக உரைக்கப்பட்ட பாதை. ஆயினும் சம்ஸார வாழ்க்கையில் இருந்துகொண்டே, மோட்சநிலையினை அடைய இயலும் என்றும், அவ்வாறு மோட்சநிலையினை அடைந்த மகான்களும் உண்டென்றும் கூறப்படுகின்றன.[17]

வீடுபேற்றை அடைவது என்பது தளைக்குட்பட்ட அல்லது அறியாமையின் பாற்பட்ட உயிர்கள் அதனின்றும் நீங்கித் தமது உண்மையான இயல்பை அடைவதாகும். அதுவே தன்னையுணர்தல் (Self – Realisation) எனப் பொதுவாகப் பேசப்படுகின்றது. வீடுபேற்று நிலையை தத்துவங்கள் பல்வேறாகக் கூறுகின்றன. அவ்வகையில் பகவத்கீதை இறுதி இலக்குப் பற்றிக் குறிப்பிடுமாற்றை இங்கு அவதானிக்கலாம்.

பகவத்கீதையில் கூறப்படும் நான்கு யோகங்களும் ஒன்றைவிட மற்றது மேலானது என்று கூறவியலாதபடி, அனைத்து யோகங்களையும் சமமாகக் காட்டுவது கீதையின் சிறப்பாகும். இவை நான்கும் ஒரே காலத்தில் சேர்ந்து கடைப்பிடிக்கப்படும் போது வாழ்கையின் குறிக்கோள் நிறைவேறுவதாக கீதை கூறுகின்றது. அந்தவகையில் நான்கு யோகங்களையும் பற்றிச் சுருக்கமாக நோக்கின்,

கிருஷ்ண பரமாத்மா கர்மயோகத்தில் கர்மத்தின் அவசியத்தை பின்வருமாறு வலியுறுத்துகின்றார்,

***"விதிக்கப்பட்ட கர்மத்தை செய், செயலின்மையை விடசெயல் சிறந்தது"***

பழக்கத்தைக் காட்டிலும் ஞானமும், ஞானத்தைவிட தியானமும், தியானத்தைக் காட்டிலும் செய்கையும் செய்கையைக் காட்டிலும் செயலிலுள்ள பற்றைத் துறத்தலும் மேலானதென கர்மயோகத்தில் கிருஷ்ண பரமாத்மாவால் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மக்கள் சேவையே மகேசன் சேவை என வாழும் தன்னலமற்ற சேவை மார்க்கமே கர்மயோகம் இதன்வழி பற்றின்றி செயல்களை ஆற்றும் நிலையில் ஆன்மா முத்தியின்பத்தைப் பெறும் இதனையே கிருஸ்ணர்,''பற்றின்றி பெருவினை ஆற்று. அவ்வாறு செயல் புரிபவன் பெரு நிலை அடைகிறான்'' என்கிறார்.

அடுத்து, பக்தி யோகம் பற்றி நோக்குமிடத்து, இது தன்னலமற்ற அன்புநெறியாகும். நிலையற்ற உலகப் பொருட்கள் மீது வைக்கும் அன்பு துன்பத்திற்குக் காரணமாகின்றது. ஆனால் யாவற்றிற்கும் மூல காரணனான இறைவன் மீது வைக்கும் அன்பு என்றும் நிலையான இன்பம் தரும். அதுவே பக்தி. இந்தப் பக்தியானது ஆசார பக்தி பிரபக்தி என இரு வகைப்படும். பக்தி யோகத்தின் சிறப்புப் பற்றியும் பகவத்கீதையில் கூறப்பட்டுள்ளது. இது,''நான் எல்லா உயிர்களிடத்திலும் சமமாய் இருக்கிறேன். எனக்குப் பகைவனுமில்லை.நண்பனும் இல்லை . ஆனால் என்னை பக்தியோடு பூஜிக்கின்றவர்கள் உளர்.நானும் அவர்கள் பால் உளேன்.'' எனும் கூற்றினூடாக வெளிப்படுத்தப்படுகின்றது.

ஞானம் என்பது அறிவு. ஞானயோகம் என்பது அறிவு வழி எணப்படும். பகவத்கீதையின் 13வது அத்தியாயம் முதல் 18ம் அத்தியாயம் வரையில் ஞானத்தை வளர்ப்பதற்கான வழிகள் கூறப்பட்டுள்ளன. இதனை ஞானயோகம் என்பர். மோட்சநிலைக்கும், ஒப்பற்ற இன்பத்திற்கும் பரமாத்மாவே காரணம். எனவே, பரமாத்மாவை அடைந்தவர்கள் மறுபிறவியை அடைவதில்லை. பரமபதம் என்பது இந்த உலகைப்போன்ற ஓர் இடமல்ல எனக்கீதை கூறுகின்றது. அது அமைதியான, பேரின்பமயமான மனநிலையே. எனவேதான் இந்தியச்சமயங்களில் அது சத், சித், ஆனந்தம் (உண்மையான உள்ளாந்த பேரின்பம்) என்று கூறப்படுகின்றது. அமைதிநிலைதான் பிரம்மநிலை என்கிறது கீதை. இதனை,''இதுவே பிரம்மநிலைபேறு ஆகும். இதையடைபவனுக்கு மோகமில்லை. இறுதிக்காலத்திலாவது இதில் நிலைத்திருப்பவன் பிரம்மநிர்வாணத்தை அடைகிறான்''[18]எனும் சுலோகம் விளக்குகின்றது.

மனிதர்களுக்குள்ள முக்குணங்களுடனான தொடர்பே அவர்கள் நல்லதும் தீயதுமான பிறவிகளில் பிறப்பதற்குக் காரணமாகின்றது. தெய்வப்பண்புடையவர்கள் இக்குணங்களிலிருந்து விடுபட்டு முக்திநிலையடைவர் எனப் பகவத்கீதை கூறுகின்றது. முக்தியடைவதற்குத் தேவையனவையென ''அஞ்சாமை, உள்ளத்தூய்மை, ஞானத்திலும் யோகத்திலும்

[16] Krishna Warrier,A.G., 1961,The Concept of Mukthi in Advaita Vedanta, University of Madras,p5.

[17]அத்வைதம்,http:/hindutemple.blogspot.com/2010/06/blog-post24.html.

[18] மு.கு.நூ, 2:72.

நிலைத்திருத்தல்,ஈகை, பொறிகளையடக்குதல், யாகம், சாஸ்திரம் படித்தல், தவம், நேர்மை, தீங்கிழையாமை, உண்மை, சினமின்மை, துறவு, அமைதி, கோள்சொல்லாமை, உயிர்களிடத்து இரக்கம்,பிறர்பொருளை விரும்பாமை, இனிமை, நாணயம், மனம்சலியாமை, தைரியம், மனவுறுதி, தூய்மை, வஞ்சகமின்மை, செருக்கின்மை”[19] போன்ற அம்சங்களைக் கீதை எடுத்துக்கூறுகின்றது.

இறுதிக்காலத்தில் பரமாத்மாவை நினைத்தபடி இறப்பவன் பரமாத்மாவின் இயல்பை எய்துவான். ஏனெனில், இறக்கும் தறுவாயில் ஒருவன் எதை நினைப்பவனாய் இருக்கிறானோ அதுவாகவே வடிவெடுப்பான் எனக் கீதை கூறுகின்றது. இதனை,“மரணகாலத்திலும் என்னையே நினைத்துக்கொண்டு உடலைத்துறந்து யார் போகின்றானோ அவன் என் சொரூபத்தையடைகிறான் என்றும், இறுதிக்காலத்தில் எப்பொருளை எண்ணிக்கொண்டு ஒருவன் உடலை உகுக்கிறானோ, எப்பொழுதும் அப்பொருளைப் பாவிப்பவனாகிய அவன் அதையே அடைகின்றான்”[20] எனக் கீதை எடுத்தாள்கிறது.

பிறப்பு, இறப்பு என்ற பிணைப்பிலிருந்து விடுபட்டு, பரமாத்மாவை அடைந்து பரமானந்தத்தில் திளைப்பதுதான் முத்தி அல்லது இறுதி இலக்கு எனப்படும். மரணகாலத்திலும் பரமாத்மாவை எண்ணிக்கொண்டிருக்கும் ஆத்மாக்கள் அவரை அடைகின்றனர். அவ்வாறு ஆன்ம விடுதலை அடைந்துவிட்ட ஆன்மாக்கள் மறுபிறவி அடைவதில்லை. இதனை,
***“மிக உயர்ந்த சித்தியை அடைந்த மகாத்மாக்கள்***
***என்னை அடைந்த விட்ட பிறகு துன்பங்களுக்கு உறைவிடமானதும்***
***நிலையற்றதுமான மறுபிறவியை அடைவதில்லை” (கீதை 8:15)*** எனும் வரிகள் விளக்குகின்றது.

இதன்பொருள் ஆன்ம விடுதலை அடைந்த ஆன்மாக்களுக்கு மறுபிறவி என்பது கிடையாது என்பதாகும். கர்மயோகம் செயல் மூலம் இறைவனை அடைதல் பற்றி குறிப்பிடுகிறது. ஆதாவது கர்மங்களை பற்றற்று செய்வதன் மூலம் கடவுளை அடைந்துகொள்ள முடியுமென பகவத்கீதை வலியுறுத்துகிறது.

பகவத்கீதையில் பகவான், அர்ச்சுனனிடம் “எல்லாக் கடமைகளையும் விட்டு விட்டு நீ மட்டும் என்னிடம் வந்து தஞ்சம் புகு. நீ வருத்தம் கொள்ளாதே. நான் உன்னை பாவங்களில் இருந்து விடுவிப்பேன்.” என பிரபக்தியில் போதிக்கிறார்.

ஸாதனைக்காலத்தில் ஸாதகன் எந்த மனப்பக்குவத்துடனும் சிரத்தையுடனும் பரமாத்மாவை உபாசிக்கின்றானோ அதை அனுசரித்து அவன் பரமாத்மாவை அடைகிறான். இரண்டறக்கலந்த தன்னையே பரமாத்மாவாக பாவித்து உபாசனை செய்பவனுக்கு இரண்டறக்கலந்து விட்ட பிரம்மநிலை கிடைத்து விடுகின்றது. பரமகதியும் பகவானை அடைவதும் வெவ்வேறில்லை. பிரம்மத்திற்கு ஒப்பானது வேறேதுமில்லை என்பதால் அது பரமகதி எனப்படுகிறது. எனவே ஆன்மாவானது பிரம்மத்தை அடைதலே ஆன்மவிடுதலை என்பது பகவத்கீதையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆன்மவிடுதலைக்கு வர்ணப்பாகுபாடு தேவையில்லை. பகவானை தஞ்சமடையும் எவராயினும் மோட்சத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
***“பார்த்தா , பெண்கள், வைசியர், சூத்திரர் என்று எவ்வகையானவரும் என்னையே தஞ்சமடையும் மேலான மோட்சத்தை பெறுகிறார்கள்” (கீதை 9:32)*** என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

அனைத்திலும் சமமாக நிலைபெற்றிருக்கின்ற பகவானைக் காண்கின்றவன் தன்னைத்தானே அழித்துக்கொள்வதில்லை. இதனால் அவன் மேலான பரமகதியை அதாவது முத்தியை அடைகின்றான். ஆணவம், அறியாமை, நீங்கியவர்களும் பற்றற்று செயல் புரிபவர்களும் பரமாத்மாவின் சொரூபத்தில் நிலைபெற்றவர்கள் மேலான இடமான முத்தியை அடைகின்றார்கள்(கீதை15:5) இவர்கள் சுயம் பிரகாசியமான விஷ்ணுவின் ஸ்தாதை(பரமபதம்) அடைகின்றாரகள். கடலைச் சேர்ந்த நீர் திரும்பி வருவதில்லை. பரமாத்மாவை அடைந்த ஜீவாத்மாக்களும் அவ்வாறுதான். அத்தகைய முத்தியடைந்த ஆன்மாக்கள் பரமாத்மாவுடன் இணைந்திருக்கும் எனக் கூறப்படுகின்றது.

பக்தி மூலம் இறைவனை வழிபடுபவர்களும், பலன் கருதாது கடமை புரியும் கர்மயோகிகளும் ஆன்மவிடுதலையைப் பெற்றுக்கொள்கின்றனர். இதனை
***“பக்தி மூலம் ஒருவன் என்னை உள்ளபடி அறிகின்றான். அப்படி என்னை அறிந்து கொண்டவன் அக்கணமே என்னில் ஐக்கியம் அடைகின்றான்” (கீதை 18:55)***
***என்னைச் சரணடையும் கர்மயோகி எப்போதும் எல்லாக் கர்மங்களையும் செய்த போதும் என்தருளால் நிலையான என்றுமுள்ள பரமபதத்தை அடைகின்றான்” (கீதை18:56)*** என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

பற்றற்று செயல்புரிந்து பரமாத்மாவை அடைந்தவன் ஸ்திரப்பிரக்ஞன் இதை அடைந்த பின் யோகி ஒருபோதும் மோகமடைவதில்லை. உயிர் பிரியும் போதும் இப்பிரம்ம நிலையிலே நிலைபெற்று பிரம்ம ஞானத்தை அடைகின்றான். (கீதை2:72) இதன்மூலம் ஜீவன் முத்தி பற்றி வலிறுயுத்தப்பட்டுள்ளது.

அகந்தை, மமதை, பற்று காமம் இன்றி பரமாத்மாவின் சொரூபத்தில் நிலைபெற்றவன் பரமானந்தம் அடைகின்றான் என பகவத்கீதை கூறுகின்றது. ஆன்ம விடுதலையைப் பற்றி விளக்குவதில் பகவத்கீதை மேலான இடத்தை பெறுகின்றது. வாழ்க்கையின் குறிக்கோள் ஆன்மவிடுதலை என்பதை இது நன்கு தெளிவுபடுத்துகின்றது.
இவ்வாறு பற்றற்று செயல் புரிதல், ஆன்மாவை பிரம்மம் என அறிந்து கொள்ளல். புலன்களை மட்டுப்படுத்தி பரமாத்மாவில் நிலைபெறுதல் போன்றவற்றின் மூலம் ஆன்மவிடுதலையை பெறமுடியும் எனக் கிருஸ்ணர் தனது உரையாடலில் கூறியுள்ளார்.

---

[19] மேற்படி, 16:1-3.
[20]மேற்படி, 8:5-6.

புரமாத்மா விடத்து பக்தி செலுத்துவதே இறைவனை அடைவதற்கான வழி என்பதைக் கீதை எடுத்துக் காட்டுகின்றது. மேலும் குறிப்பிடுகையில் **"மனதை என்னிடத்தில் வைத்து, என்பால் பக்தி பண்ணிஎன்னையே வணங்கு. என்னைக் குறியாகக் கொண்டு,**
**உள்ளத்தை உறுதிப்படுத்தி என்னையேஅடைவாய்"**(ராஜயோகம் சுலோகம் 34)எனவும்,

**"என்னிடத்தில் மனதை வைத்து, என்னிடத்து பக்தியை செலுத்துகபின்பு என்னிடத்தே வசிப்பாய் என்பதில் சந்தேகம் இல்லை"**(பக்தியோகம்: சுலோகம்-8) எனவும் பக்தி மூலம் பரமாத்மாவை அடைவதைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.

ஆசைகளை அகற்றி, புலன்களை ஒடுக்கி இன்ப துன்பங்களைச் சமமாக மதிப்பவனே முற்றறிஞன் இத்திறன் கைவரப்பெற்றவன் சாந்தியடைகின்றான். அதுவே பிரம்ம நிலைபேறாகும். எனக் கீதை கூறுகின்றது.

மேலும், பகவத்கீதை குறிப்பிடும் முக்தி பற்றி நோக்குமிடத்து, கீதை இரண்டாம் அத்தியாயம், இரண்டாம் சுலோககத்திலே முக்தி பற்றிக்கூற ஆரம்பித்து அவ்வத்தியாயத்தின் இறுதிச்சுலோகமே மனிதன் அடையவேண்டிய இறுதி இலட்சியம் என்ன என்பதைக் கூறுகின்றது. அந்த இலட்சியமே 'பிரம்மநிர்வாணம்' என்று கீதை அறுதியிட்டுக்கூறுகின்றது. அதுவே பிரம்ம நிலைபேறு, மனம் வாக்குக்கு எட்டாத பேரானந்தப்பெருநிலை, இந்தப் பெருநிலையை அடைந்தவனே மேலான சுகமடைகிறான்[21] எனக்கீதை விளக்குகின்றது. தியானயோகத்தில் ஒரு சுலோகம் இந்த மேலான சுகம்பற்றி இவ்வாறு கூறுகின்றது. "மிகச்சாந்தமான மனத்தையுடைய, ரஜோகுணத்தின் வேகம் தணிந்த, பாவமற்ற, தானே பிரம்மமான யோகிக்கே கிட்டுகிறது."[22]

பகவத்கீதையில்முக்தியடைவதற்கான வழிகளென கர்மயோகம், ஞானயோகம், தியானயோகம், பக்தியோகம் போன்றன கூறப்பட்டுள்ளன. இவற்றில் ஏதாவது ஒரு வழியைப் பின்பற்றுவதன் மூலம் முக்தியடையலாம். பிறவாப்பெருநிலையைக் கர்மயோகத்தால் பெறலாம் எனக்கீதை கூறுகின்றது. இதனை,"பற்றற்றுப் பண்புடன் பெருவினையாற்றுக. ஏனெனில், பற்றற்றுத் தொழில்புரியும் புருஷனே பெருநிலையைப்பெறுகின்றான்."[23]எனக்கூறுகின்றது. இக்கருத்தினை மேலும் தெளிவுபடுத்துவதாகவே,

***"அரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே***
***பேரா இயற்கை தரும்"***[24] எனும் குறள் காணப்படுகின்றது. இதன் கருத்து என்னவெனில், ஒருபோதும் நிரம்பாத அவாவினைக்கைவிட்டால்,அந்தப்பொழுதிலே,பெரிதான இன்பவாழ்வினை அந்நிலைமையானது தானாகவே தந்துவிடும் என்பதாகும்.

ஞானயோகத்தாலும் முக்தியைப்பெறலாம் எனக் கீதையில் கூறப்பட்டுள்ளது. இதனை,"எனது திவ்விய பிறப்பையும் செயலையும் உள்ளபடி அறிபவன் உடலை நீத்து மறுபிறப்பெய்துவதில்லை, என்னையே அடைகிறான் என்றும், ஆசை, அச்சம், சினம், நீங்கினவர்களாய், என்மயமாய் என்னை அடைக்கலம் புகுந்து, ஞான தபசால் புனிதர்களாய்ப் பலர் என் இயல்பை எய்தினர்."[25] என ஞானகர்மஸந்யாஸ யோகம் கூறுகின்றது.

தியானயோகத்தாலும் முக்தியைப்பெறலாம்.(கீதை.6:45), பக்தியோகத்தாலும் முக்தியைப்றெலாம்(கீதை.7:23). தவப்பயிற்சியைவிட ஞானம் சிறந்தது,ஞானத்தைவிடத் தியானம் சிறந்தது. தியானத்தைவிடச்செயலின் பலனைத்துறப்பது சிறந்தது. செயலில் துறவைக்காட்டிலும் கர்மயோகம் சிறந்தது(கீதை.6:46). இவை எல்லாவற்றைக்காட்டிலும் பக்தியோகம் சிறந்தது எனக்கீதை கூறுகின்றது.

**முடிவுரை**

பகவத்கீதையின் முக்கிய நோக்கம் .ஆன்மாக்களின் முத்தியடைவுக்குரிய வழிவகைகளைப் பற்றிக் கூறுவதாக உள்ளது. இதற்கு கர்ம, பக்தி, ராஜ, ஞான யோகங்கள் அவசியம் எனக் குறிப்பிடுகின்றது. விடுபேற்றிற்குரிய வழிவகைகளைப் பற்றி இப் புனித நூல் அதிகம் கூறுவதனாலேயே தான் இன்றுவரை இது இந்துக்கள் மத்தியில் முக்கியம் பெற்று விளங்குகின்றது என எண்ணத்தோன்றுகின்றது.

உலகியல் வாழ்க்கையை ஓர் அரசமரத்துடன் உவமையாக்கி மனித வாழ்வின் இறுதி இலக்கினைப்பற்றிப் பகவத்கீதை கூறியிருக்கின்றது."அதற்கு முதலும் முடிவும் கிடையாது. புலனாகாதது. மனிதர், விலங்குகள் முதலியவை அதன் கிளைகள், வேதங்கள் அதன் இலைகள், புலனுகர்வுப்பொருட்கள் அதன் தளிர்கள், விருப்பத்தினால் செய்யப்படும் செயல்கள் அதன் வேர்கள், இந்த வேர்கள் மனிதனை உலகியலில் பிணைக்கிறது. இவை இயற்கையின் குணங்கள் எனும் நீரால் வளர்கின்றன. இந்த மரத்தின் வேர்களைப் பற்றின்மை எனும் வாளால் வெட்டி எறிய வேண்டும். பிறகு பரம்பொருளைத்தேடிச் சரணடையவேண்டும். அந்த வேர்களை வெட்டுபவனின் மனப்பாங்கு தற்பெருமையை அகற்றி, பற்றை

[21]அரங்கசாமி, இரா., 2004, பகவத்கீதை: தெளிவை நோக்கி, காவ்யா பதிப்பகம், கோடம்பாக்கம், சென்னை, ப.366.
[22] பகவத்கீதை, 6:27.
[23] மேற்படி, 3:19.
[24]புலியூர்க்கேசிகன், 2008, திருக்குறள், பூம்புகார் பதிப்பகம், சென்னை, ப.79.
[25] பகவத்கீதை, 4:8-9.

வென்று, ஆத்ம ஞானத்தில் நிலைத்து இருமைகளைக் கடந்து இருக்கவேண்டும். அப்பொழுது பரம்பொருளை அடையலாம்"[26] என இறுதி இலக்குப் பற்றிப் பகவத்கீதை எடுத்தியம்புகின்றது.

[26] மேற்படி, 15:1-5